சேலம் ஸ்ரீ கன்னிகாபரமேஸ்வரி தேவஸ்தான

கும்பாபிஷேக மலர் - 1954.



23 JUL 1954

மூன்று தங்க கலசங்களுடன் நூதன ராஜகோபுரம்.

30 JUL 19..
MADRAS

சமர்ப்பணம்

அன்னை ஸ்ரீ வாஸவ கன்னிகாபரமேஸ்வரி தேவியின் அருளால் நம் நகர் ஷை தேவாலய மகா கும்பாபிஷேகம் இனிது நடைபெறுகின்ற இந்நாள் நம் ஆர்ய வைஸ்ய சமூகத்தினருக்கே ஓர் சுபதினமாகும். இம் மகத்தான வைபவத்தின் ஞாபகார்த்தமாகவும், நம் சகோதரர்களும், நம் சந்ததியார்களும், ஏனைய வெளியூர் நம் சமூகத்தினரும், நம் அம்பிகையின் ஆலயத்தைப்பற்றியும், அதில் அன்றுடம் நடைபெறும் உத்ஸவாதிகளையும் அது சம்மந்தப்பட்ட பல விஷயங்களையும் தெரிந்து கொள்ளவும் இம்மலர் தொகுக்கப்பட்டதின் முக்கிய நோக்கமாகும்.

இக் கும்பாபிஷேகத்தின் பல்வேறு அலுவல்களைக் கவனிக்கவும், வெற்றிகரமாக நடத்தவும், நம்மில், பல கமிட்டிகளும், சப் கமிட்டிகளும் அமைக்கப்பட்டு, கடந்த இரண்டு ஆண்டு காலமாக காரியங்கள் நடைபெற்று வந்திருக்கின்றன. விழாவின்போது, தேவஸ்தானத்திலும் சந்தர்ப்பனைகளிலும் சுமார் 300 பேர்கள் கொண்ட நம் யுவர்கள் தொண்டர்படை சிறந்த பணியாற்றி வந்திருக்கிறார்கள்.

சில தினங்களுக்கு முன்புதான் இக்கமிட்டியார், இம்மலரைத் தொகுக்க தீர்மானித்தனர். தேவஸ்தான சம்மந்தப்பட்ட விவரங்களை சேகரித்துக் கொடுத்துதவிய தேவஸ்தான டிரஸ்டிகளுக்கும், இந்த விஷயங்களையும், இன்னும் இதர விஷயங்களையும் தொகுத்துக் கொடுத்த, நம் பாலகவி, ஆனத்தூர் ஸ்ரீ M. K. வேங்கடராமன் அவர்களுக்கும், இன்னும் இதர கட்டுரைகளை தந்துதவிய இதர கனவான்களுக்கும், தேவஸ்தான கும்பாபிஷேக நிதியினின்றும் செலவு செய்யப்படாமல், உள்ளூரிலும் வெளியூரிலும் உள்ள நம்மவர்களே விளம்பர மூலம் திரவ்ய சகாயம் செய்தவர்களுக்கும், இக்கமிட்டியாரின் நன்றி உரித்தாகுக.

மிக குறுகிய காலத்தில், சுமார் 15-தினங்களில், நம் நகர் "ஸ்ரீ வாசவி பிரஸ்" அவர்கள் உற்சாகத்துடனும், நிதி வசதிக்காகவும் அவர்களே பொருப்பேற்றுக்கொண்டும் இவ்வளவு சிறந்த முறையில், உயர்ந்த காகிதத்தில் நல்ல அழகுள்ள மலராக வெளியிட பெரிதும் உதவியதற்கு எமது மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

சேலம்,
24—5—'54

சேலம் ஸ்ரீ கன்னிகாபரமேஸ்வரி தேவஸ்தான
மகாகும்பாபிஷேக கமிட்டி.
(Souvenir Sub-Committee.)

ஓம்
ஸ்ரீ கன்னிகாபரமேஸ்வரி சகாயம்.

30 JUL 1956

ஸ்ரீ கன்னிகாபரமேஸ்வரி கும்பாபிஷேகக்-கீர்த்தனை

24—5—1954

"எத்தனை சொன்னாலும் அறியாதவர் போல"—என்ற மெட்டு.

ஸாவேரி ராகம்—ஆதி தாளம்.

பல்லவி

கும்பாபிஷேகம் கொண்டாள்—கன்னிகாபரமேஸ்வரி
குவலயத்துள்ளோர் உய்ந்திட (கு)

அநுபல்லவி.

தன்பாதம் பணிபவர்—துயரங்களைத் தீர்த்திடத்
தென்பால் உள் சேலம் தன்னில்—திருநிறை கடை வீதியில் (கு)

சரணம்.

கோபுரம் கலசமும்—கோதில்லாச் சுற்றுப் புறம்
தாவில் தாழ்வாரங்கள்—தம்மைப் பழுதுகள் நீக்கி
மேவிய ஜய வைகாசி—மேன்மை பதினொன்றில் திங்கள்
ஆவியல் விடபலக்னம்—அமிர்த திருவோணத்தில் (கு)

சித்தி விநாயகன்—தம்பி தண்டபாணியும்
சீதா லக்ஷ்மணனுடன்—அனுமத் சமேத ராமன்
நத்தும் நற்குழல் கண்ணன்—நவக்கிரகங்களொடு
இத்தரை போற்றிட—ஈடேற்றி யருள் செய்ய (கு)

வேத புராணங்கள்—வேதியர் ஓதிட
வேத வேள்விகளோடு—வேண பாராயணம் செய்ய
நாதஞ் செய் வாத்தியங்கள்— நானாவித மியங்க
பாதம் பணிபக்தர் வாழ்த்தும்—பாட்டுக்கள்
தாமு முழங்க (கு)

—எழுதியது: "கணபதிதாஸன்".

சேலம் ஸ்ரீ கன்னிகாபரமேஸ்வரி தேவஸ்தான மஹா கும்பாபிஷேகம்.

24—5—1954 திங்கட்கிழமை.

CONNEMARA PUBLIC LIBRARY

SRI VASAVI PRESS, SALEM

ஸ்ரீ வாசவ கன்னிகாபரமேஸ்வரி

3 JUL 1958
MADRAS

ஓம்

தோத்திரப்பாக்கள்.

ஸ்ரீ சித்தி விநாயகர்.

அன்புசெயும் அடியவருக் கருள்நலமாம்
அமுதுசுரந் தூட்டு வானை
என்புருக உருகுநருக் கிகசுகமும்
பரசுகமும் இனிதீ வானை
பொன்பொலியும் சேலநகர்ப் புகழ்பெருக்கும்
வாசவியின் புனிதக் கோயில்
இன்புருவொ டிருந்துசித்தி யனைத்தும்அருள்
இபமுகனை இறைஞ்சி வாழ்வாம்.

ஸ்ரீ பால தண்டபாணி.

ஆல மமுதெனவுகக்கும் அண்ணல்நெற்றிக்
கண்ணிலிருந் தவத ரித்தே
காலனல்கங் கையும்வெருவும் கனற்பொறியாய்ச்
சரவணத்திற் கவினுர் சேயாய்
சேலநகர் திகழ்வாச வாம்பிகையின்
திருத்தளியில் சிறந்து வைகும்
பாலதண்ட பாணியிரு பதமலர்கள்
உளத்தமைத்துப் பரவி வாழ்வாம்.

ஸ்ரீ கன்னிகா பரமேஸ்வரி.

அருவமுட னுருவமுமாய் அருமறைக்குள்
அமைபொருளாய் அறிவா னந்தத்
திருவையருள் சிவவொளியாய்ச் சேலநகர்க்
கடைத் தெருவில் சிறப்புற் றோங்கும்
ஒருதளியில் அமர்ந்தருளை உவந்தூட்டும்
வாசவிதாள் உளத்துட் கொண்டே
இருவினையும் மும்மலமும் எளிதகற்றி
இன்பநுகர்ந் தினிது வாழ்வாம்.

ஸ்ரீ கண்ண பிரான்

எண்ணரிய பலவுலகும் உண்டுமிழும்
எழில்வாயென் றெண்ணு தின்று
மண்ணையுண்டு வந்தனையோ வாய்திறப்பாய்
என்றுரைத்த மாதா நோக்க
வண்ணவுல கனைத்தினையும் வாயிடைக்காட்
டியமதலை வளமார் சேலத்
துண்ணிலவு வாசவிகோ யிலிலுறையும்
கண்ணனடி யுளத்துட் கொள்வாம்.

ஸ்ரீ ராம பிரான்.

ஒளியுருவ முடைக்கதிரோன் திருக்குலத்தில்
தயரதனுக் குயர்சே யாகி
அளியுருவப் பரதசத்து ருக்னலக்கு
மணர்களுடன் அவத ரித்தே
களிவளரும் நெறியினையிக் காசினியோர்க்
கினிதுணர்த்திக் கவினுர் சேலத்
தளியிலனை வாசவியொ டமர்ந்தருள்செய்
தாசரதி மலர்த்தாள் போற்றி.

ஸ்ரீ ஆஞ்சநேயர்.

வாயுசுத னெனவுதித்து வளர்கருணை
வடிவுடையி ராமற் காகத்
தூயவிண்ணின் துறைபடர்ந்து சூழுநெடுங்
கடல்கடந்து சூருர் சேர்ந்து
மேயபுவி யருள்மணியைக் கண்டாழி
தந்திலங்கை வியனூர் வேகத்
தீயையும்வைத் திறையடிதாழ் சொற்செல்வன்
அனுமனடி சிந்தை செய்வாம்.

ஸ்ரீ நவக்கிரஹங்கள்.

உவமைசொலற் கரிதெனநன் றெளிரருளாம்
சக்தியினுல் உருண்டு நாளும்
அவமழியத் தவமலிய அருள்விளக்கம்
அதிகரிக்க அறிவை யூட்டிப்
புவனிமுதற் பலவுலகும் இனிதியங்கப்
பொலிகதிர்அம் புலிபொன் ஞதி
நவவுருவில் அமைகிரகத் தலைவர்கழல்
நனிபரவி நவைகள் தீர்ப்பாம்.

கணபதி துணை. குருநாதர் துணை. வேலுமயிலுந்துணை.

(சேலம் ஸ்ரீ கன்னிகாபரமேஸ்வரி ஆலயம்—அம்பிகை சந்நிதி)

ராகம் - ஹரிகாம்போதி. தாளம் - ஆதி.

தீவினை அழிவாக.

தனன தானன தானன தானன தனதான.

1. [1]பொன்னி காவிரி [2]பாலி [3]பகிரதி [4]கிளியாறு-
புண்ய மாநதி யாடிய போதிலும் வினைதீரா;

[5]கன்னி கோயிலில் மாமுடி கீழ்விழ வழிபாடு-
[6]கண்ய மாய்புரி போதுறு **தீவினை அழிவாமே;**

கன்னி காபர மேஸ்வரி [7]ஆர்யவை சியஜாதன்;
[8]**கண்ணி** யேதொழு நாயகி [9]**வாசவி** [10]சகஜாதன்;

[11]கன்னி காபதி! பூபதி! மாவடு [12]வகிர்[13]மாழைக்-
கண்ணி [14]ஏரணி நாரணி தாயருள் பெருமாளே.

குறிப்புரை:— 1. பொன்னி, காவிரி—காவேரி நதியைக் குறிக்கும் ஒரு பொருட் பன்மொழி. 2. பாலி—பாலாறு. 3. பகிரதி—பாகீரதி-கங்கை. 4. கிளியாறு—புதுச்சேரிக்குத் தெற்கிலுள்ள கிளிஞ்சிலாறென்னும் ஒரு நதி. 5. கன்னி—கன்னியாகுமாரி-கன்னிகாபரமேஸ்வரி. 6. கண்யம்—கௌரவம்; மதிப்பு. 7. ஆர்ய வைசிய ஜாதர்—ஆரிய வைசிய ஜாதியினர். 8. கண்ணி—கருதி. 9. வாசவி—வாஸவாம்பிகை. 10. சகஜாதன்—உடன் பிறந்தவன் (பார்வதியின் சகோதரர் திருமால்). 11. கன்னிகா பதி—மருமகன்; மாப்பிள்ளை. 12. வகிர்—பிளப்பு. 13. மாழை—அழகு. 14. ஏர் + அணி—ஏரணி—அழகுபொருந்திய.

(ஷை கோயில் இராமபிரான் சந்நிதி)

ராகம் - தோடி. தாளம் - ஆதி.

துதி.

தனதன தானன தனதன தானன
தனதன தானன தனதான

2. தசரதர் கோசலை தந்தவ மாமணி
ஜயஜய ராகவன் அபிராமன்—

[1]ஸரஸிஜ லோசன மரகத மோஹன
ஜகபதி ஜானகி மணவாளன்;

தச[2]கள ராவண தலஹரி சாமள
[3]தமனிய மேனியன் அனுமனைச்—

சரண சரோருக திருவடி [4]தாரண
[5]ஸகபதி யாவுடை ரகுநாதன்;

[6]தசசத மாமுடி பரத சகோதர
[7]சததள நாபியன் மகராஜன்—

தனுதரன் [8]ஆசுக தர[9]னலை மேலொரு
சரமெறி காரணன் அதிவீரன்;

[10]அஜகஜ பாலகன் [11]அகலிகை பாலகன்
அரிதிரு நாரணன் மருகோனே—

அறுமுக! [12]பாலக! [13]மயிலயில் வேலவ!
[14]அரிவன மால்மகிழ் பெருமாளே.

குறிப்புரை:— 1. ஸரஸிஜம்—தாமரை. 2. களம்—கழுத்து. 3. தமனியம்—பொன். சாமள தமனியம்—பசும்பொன். சங்கர நாராயணர் திருக்கோலத்தில் 'பொன்னார் மேனிய'னும் சிவபிரானின் வலப் பாகத்தில், 'பச்சை மாமலை போல் மேனிய'னும் திருமால் கலந்தமையின், அத் திருமால் பசும் பொன்னிறத்தவ ராயினர் போலும். ஆதலினால் தான் இங்குத் திருமால் 'சாமள தமனிய மேனியன்' எனப்பட்டார் போலும்.

சாமள மேனியன்—பச்சைவண்ணன்; தமனிய மேனியன்—பொன் வண்ணன், எனவும் சிவ விஷ்ணு ஐக்கிய காரணத்தாற் பொருள் கொள்ளலாகும்.

"மண்ணினை யுண்ட மாயன் தன்னையோர் பாகங் கொண்டார்"
(அப்பர் தேவாரம்.)

"ஒருபாதி மால்கொள, மற்றொருபாதி உமையவள் கொண்டு"
(தனிப்பாடல்.)

4. தாரண—(இராமபிரானது தாமரைத் திருவடிகளைக் கைகளிற் றாங்கித்) தரிக்கின்ற. 5. ஸகபதியா உடை—உடனிருக்கும் பதவியாளனாக (தமது தாஸனாக) உடைய. 6. தசசத மாமுடி—(10 × 100) ஆயிரம், பெரிய, மகுடங்களையுடைய ஆதிசேடனும் இலக்குமணனை—இருமடியாகு பெயராய்-உணர்த்திற்று. [தசம்—பத்து; சதம்—நூறு; முடி—கிரீடம்] இலக்குமணனுக்கும் பரதனுக்கும் இராமபிரான் சகோதர ராவர். 7. சததளம்—தாமரை. 8. ஆசுகம்—அம்பு. 9, அலை—கடல். 'அலைமேலொரு சரமெறி காரணன்'—காரணார்த்தமாகக் கடல்மீது ஒப்பற்ற ஒரு அம்பை எய்தவன். இராமபிரான் கடல்மேற் பாணம் விட்ட வரலாறு இது. 10. அஜகஜ பாலகன்—அஜபாலகன் – ஆத்மாக்களைச் சம்ரக்ஷிப்பவன் (அஜம்-அசம்-ஆத்மா). கஜபாலகன் — (கஜேந்திரனாகிய) யானையைக் காப்பாற்றியவன். அஜகஜ பாலகன் — அனைத்தையும் காப்பவன் எனினுமாம். (அஜகஜாந்தரம் என்பது போல) "அஜகஜரக்ஷக" என்பர் தியாகராஜ ஸ்வாமிகளும். 11. அகலிகை பாலகன்—அகலிகையைப் பரிபாலித்தவன். 12. பாலக—குழந்தையே! 13. மயில் அயில் வேலவ—மயிலையுடைய கூரிய வேலனே! 14. அரிவனம்—கிளிக்காடு—சேலம் (அரி-கிளி).

N. B:-மேற்காணும் இருபாடல்களும், தற்காலம் சென்னையிலுள்ள (16 வயதுடைய இளஞ்செல்வர்) **பால அருள்கவி** திருமிகு **S. V. சேதுராமன்** அவர்கள் தமது சகோதரரான திருமிகு **S. V. சுப்பரமண்யம்** அவர்களுடன் (30-1-54 முதல் 1-2-54 வரை) சுவாமி தரிசனார்த்தம் சேலமா நகருக்கு விஜயம் செய்த காலை, 30—1—54 மாலை இந்த தேவஸ்தானத்திற்கு சுவாமி தரிசனம் செய்ய வந்த சமயம் அருள்வாக்காகப் பாடிய பாடல்களாகும்.

பூவாளூர்
ஸ்ரீ ராமகிருஷ்ணா விலாஸ்

உயர்தர கைத்தறி ஜவுளி உற்பத்தியாளர்கள்,

பூவாளூர்.

லால்குடி, S. Ry. (Trichy Dt.)

எங்களிடம் உத்திரவாதத்துடன்
கெட்டிச்சாயம் 100 நெ. நூலில் அழகிய பார்டர்கள்
புதிய டிசைன்களில் சேலைகளும்,
சோலி பீஸ்களும்
எப்பொழுதும் கிடைக்கும்.

★

Branch Office :

குடிவாடாவாரி தெரு,

விஜயவாடா.

పువ్వాళూరు శ్రీ రామకృష్ణ విలాస్,
చేనేత చీరెలు అండ్ చోలీలు ఉత్పత్తి అండ్ వ్యాపారం,
గుడివాడవారి వీధి, విజయవాడ.

ஓம்

3 0 JUL 1956

அருளொளி தோன்றிய அற்புதம்

பூவுலகில் வாழும் உயிர் வர்க்கங்களுள் மனித உடல் பெற்ற மக்களினம் சிறப்புடைத்தென எல்லோராலும் கருதப்படுகிறது. மக்களாகிய நாம் ஒவ்வொருவரும் இவ்வுலகத்தை அனுபவித்து வருகிறோம் என்பது நமக்கு அறிவு தோன்றிய நாள்தொட்டு நன்றாகத் தெரிகிறது. பரந்து விரிந்து, பல்வகைப் பொருள்களைத் தன்னகத்தேகொண்டு, பல்வகையானும் உயிர்களுக்கு உதவிவரும் இவ்வுலகம் ஏது? நமக்கும் இவ்வுலகுக்கும் என்ன சம்பந்தம்? நாம் ஏன் இவ்வுலகில் தோன்றினோம்? இங்கு இவ்வுடல் கொண்டு தோன்றுதமுன் எங்கிருந்தோம்? எப்படியிருந்தோம்? (இவ்வுடல் ஒருநால் இவ்வுலகிலேயே தங்கிவிடுகிறதையும், இதனுள் உள்ள ஒரு அற்புதச்சக்தியாகிய உயிர் இதினின்று பிரிந்து விடுகிறதையும், வேறு பலரின் மறைவிலிருந்து காண்கிறோமே; அவ்வாறு) உடலை விட்டுப்பிரியும் உயிர் எங்கு செல்லுகிறது? என்ன ஆகிறது? என்பன போன்ற சில கேள்விகள் எழுந்தால், அவற்றிற்குச் சரியான விடை கிடைப்பது அரிதாகிறது.

இத்தகைய சிக்கலான (எளிதிற் புரியாத) கேள்விகளுக்குப் பலதருணங்களில் தக்க விடை கிடைத்துள்ளது என்பதையும், அவற்றை விளக்கும் பொருட்டு, பரந்த இவ்வுலகிற்கு ஆதார மூலமான வஸ்துவே உருக்கொண்டு வந்து, பல சமயங்களில் உண்மை விளக்கம் அருளியிருப்பதையும், மற்றும் பல தருணங்களில் அவ்வற்புத வஸ்துவின் சம்பந்தம் பெற்ற அருளாளர் பலர் அவனியில் தோன்றி, அருள் திரு நெறியை விளக்கியிருப்பதையும் உலக சரித்திரம் உரைத்து வருகிறது.

அவ்வாறு தோன்றிய அவதார மூர்த்திகளும், அருட்செல்வர்களும் அவ்வப்போதுள்ள உயிர்களின் பக்குவ நிலைக்கேற்பவும், காலத்திற்கேற்பவும், இடத்திற்கேற்பவும் விளக்கம் கூறி, செந்நெறி வகுத்துத் தந்தனர். அவர்கள் கூறும் விளக்கங்களும், வகுக்கும் செந்நெறியும் நாளடைவில் அருகியும், மாறுபட்டும் ஆற்றலில் குறைபடும் தருணங்களில், மீண்டும் தக்க விளக்கமும் தக்க நன்னெறியும் வழங்கும் பொருட்டு, மற்றோர் அவதாரம் தோன்றுவது இயல்பு. இவ்வவதாரங்கள் ஆணுருவுடனோ பெண்ணுருவுடனோ தோன்றலாம். இவ்வாறு தோன்றிய எண்ணற்ற அவதாரங்களில் மிகச்சிறப்புடையன சிலவுண்டு என்பது ஆன்றோர் கருத்து. அவற்றுள் ஒன்றே நம் வாசவியின் அவதாரமாகும்.

புண்ணிய பூமியாகிய நம் பாரத நாட்டில், ராஜமகேந்திரபுரத்திற்கடுத்துள்ள பெனுகொண்டாபுரியையும், அதைச் சூழ்ந்துள்ள 18 வைஸ்ய பட்டணங்களையும் அரசாண்டு வந்த ஆரிய வைசியரான குசும செட்டியாரும், அவரது பத்னியாரான குசுமாம்பிகையும் புரிந்த அருந்தவப் பயனும், புத்ர காமேஷ்டி எனும் யாகத்தின் பயனும் அருட்சக்தியின் 'அம்சமான **வாசவாம்பிகையும்,** விஷ்ணு அம்சமான **விரூபாட்ச செல்வனும்** அவதரித்தனர். அருந்தத்துவங்களைச் சூசிப்பிக்கும் அருள் விளையாடல்கள் ஆற்றினர். குருகுல வாசம் புரிந்தனர். திருமணப்பருவம் எய்தினர். திக்விஜயம் செய்து வெற்றி பெற்று, நாடு திரும்பும் விஷ்ணு வர்த்தனன் எனும் ராஜமகேந்திர புரத்து அரசன், செல்வி வாசவியின் சீரழகு கண்டு, காமுற்று மணக்க எண்ணினன். பெண்ணைத் தனக்கு மணம் செய்து தருமாறு பெற்றோர்களை வினவினன். குசும செட்டியார் வேறு குலத்தவருக்குப் பெண்ணைத்தர விரும்பவில்லை. 612 கோத்திரத்தவர் பெண்ணை அரசனுக்குத் தரலாம் என்றனர்' 102 கோத்திரத்தவர் தரத்தகாது என்றனர். இவர்கள் தர்மத்திற்கும் வைதீக ஆசாரணைக்கும் தங்கள் உயிரையும் அர்ப்பணம் செய்யத் தயாராயிருந்தனர். இவர்களது அதிதீவிர உறுதியைக்கண்ட 612 கோத்திரத்தவர் இவர்களோடு இருந்த தொடர்பைத் தவிர்த்துக்கொண்டு தனியே பிரிந்தனர். தீவிர நோக்கமுள்ள சிறுபான்மையோர் செல்வி வாசவியின் திருவுளத்தைத் தெரிந்துகொள்ள விரும்பினர். அப்போது அருட் சக்தியாம் அம்பிகை தன் அற்புத விஸ்வரூப தரிசனத்தைத் தந்தருளி, அனைவர்க்கும் அகக்கண் வழங்கி கண்டுகளிக்கச் செய்தனர். அனைவர்க்கும் ஞானோபதேசம் செய்தனர். பெரியார் பலரும் ஞானக்னியில் மூழ்கி ஜீவன் முக்திப்பேறு பெற்றனர். சகல தேவர்களும் சிவனும் அரியும் பிரமனும் காட்சி தந்தனர். விஷ்ணு வர்த்தன மன்னனின் அகந்தை அடியோடு அழிந்தது. சாந்த விருபாட்சற்குச் சக்தி முடி சூட்டினள். அம்பிகை வாசவியும், அரன் அரியாதியரும் அந்தர்த்தானமாயினர். விஷ்ணு வர்த்தனின் குமாரனை ராஜராஜனும், விரூபாக்ஷனும் கலந்து **அம்பிகை வாசவிக்குப்** பெனுகொண்டாவில் ஆலயம் அமைத்தனர். (பதினோராம் நூற்றாண்டில் இச் சரிதம் நடந்திருக்கலாம் எனத் தற்கால ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.) அம்பிகையின் விரிவான வரலாற்றை '**ஸ்ரீ** வாசவீ விஜயம்' எனும் நூலில் தெளிவுறக் காணலாம்.

ஆரிய வைசிய மக்கள் பெரும்பாலாக வாழும் இடங்களிலெல்லாம் தங்கள் குல தெய்வமாகிய **ஸ்ரீ கன்னிகாபரமேஸ்வரிக்குக்** கோயில் அமைத்து வழிபட்டு வருவதும், வழிபடும் அன்பர்களுக்கு வேண்டிய நலம் பலவும் அம்பிகை வாசவி அருள்புரிந்து காத்து வருவதும் அனைவரும் அறிந்த அனுபவ உண்மையாம்.

வாழ்க அறநெறி ! **சூழ்க அருளொளி !!** **வளர்க நலமெலாம் !!!**

மிகுந்த திருப்தி தரக்கூடிய

அழகிய வேலைத்திறன் மிக்க

பொன் வைர நகைகளுக்கு

3 JUL 1956

P. A. R. சில்.

நம்பிக்கையானவை.

★

P. A. ராஜா செட்டியார் & பிரதர்.

"ஸ்வர்ண மாளிகை"

கோயமுத்தூர்.

தந்தி : ராஜா   போன் : 268   தபால்பெட்டி : 139

விளம்பரம்

ஆதிகாலத்து
ஒரிஜினல் மிட்டாய் கடை,

72, கீழாவணி மூலவீதி. மதுரை.

எங்களிடம் ராசீபுரம் சுத்தமான நெய்யினுல் தயாரிக்கப்பட்ட இனிப்பு, கார பலகாரங்கள் கிடைக்கும்,

கோதுமை கெட்டி அல்வா 72 தோலா விலை	ரூ.		4—0—0
பாதாம் அல்வா	,,	,,	5—0—0
டிலக்ஸ் மிக்சர்	,,	,,	3—0—0
காராசேவு தனி நல்லெண்ணெயில் தயாரித்தது	,,	,,	2—8—0

ஷை சாமான்கள் ஒரு மாதம்வரை வைத்திருந்து சாப்பிட்டாலும் புதிதாய் போட்ட சரக்குமாதிரி இருக்கும். தேவைக்கு எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு ஷை விலைப்பிரகாரம் முன் பணம் அனுப்பினுல் நன்ருய் பாக் செய்து போஸ்டு பார்சல் அல்லது ரயில்வே பார்சல் மூலம் அனுப்பப்படும். ஷை சாமான்களின் பாகிங் சார்ஜூம் போஸ்டல் ரயில்வே சார்ஜூம் பில்லுடன் சேர்த்து வாங்கப்படும்.

N. B.

ஒரே தடவையில் ரூ. 100 க்கு குறையாமல் ஆர்டர் கொடுப்பவர்களுக்கு மேல்கண்ட விலையிலிருந்து 10 பர்சண்டு வீதம் தள்ளுபடி செய்து தரப்படும்.

SRI RAMAJAYAM

Tele { Phone 509.
Crams 'GUARANTEE'

போன் : 509.
தந்தி : கியாரண்டி.

P. A. RAJU CHETTIAR & BROR.
P. M. THAMMANNA CHETTIAR,

JEWELLERS,

BIG BAZAAR STREET, TIRUCHIRAPALLI.

எல்லோராலும் நன்கு மதிக்கப்பெற்ற வைரத்திற்கு சமமாக பிரகாசிக்கும் எங்கள் பிரைட் வைரம் பதித்த வேலைத்திறன் மிக்க நவீன நாகரீகத்திற்கு ஏற்ற முறையில் கியாரண்டியாக தயார்செய்த **தோடு, கடுக்கன், ஸ்டட்ஸ், தொங்கட்டான், ஜிமிக்கி, டாலர், நெக்லஸ், பேசரிகள்** முதலான சகலவிதமான கல் நகைகளும் எங்களிடம் கிடைக்கும்.

ப. அ. ராஜு செட்டியார் & பிரதர்,
பெ. மு. தம்மன்ன செட்டியார்,

நகை வியாபாரம்,

பெரியகடைவீதி; :: திருச்சிராப்பள்ளி.

உ

Sri Ramajayam

Sri Prasanna Venkataramanaswami Sahayam.

S. M. VENKATRAMA CHETTIAR & Sons

MALIGAI, JAGGERY MERCHANTS.

Distributors :

IMPERIAL CHEMICAL INDUSTRIES (India) LTD.

GENERAL MERCHANTS & COMMISSION AGENTS.

PAUNDAMANGALAM. (Salem Dt.)

Branches :—

KODUMUDI

VELUR (Salem Dt.)

& MOHANUR

Dealers in Jaggery Special :—

★ MENAKA

★ KANNADI

★ ONE HALF

★ SECOND

BEST SERVICE & HONESTY IS OUR MOTTO.

சென்னையிலிருந்து உங்கள் சரக்குகளை

லாரி வசம் குறைந்த வாடகையில்

★ துரிதமாக

★ திறமையோடு

★ உங்கள் வாசலில்

டெலிவரி கொடுக்கச் செய்கிறோம்.

இது தவிர

கடல் மார்க்கங்களிலும்

அயல் நாடுகளுக்கு சரக்குகளை ஏற்றியனுப்பும் அனுபவஸ்தர்கள்.

தந்தி : TEEJAYJEE.

T. ஜெகன்னாத குப்தா & ஸன்ஸ்,

மார்ச்சென்ட்ஸ், கமிஷன் & கிளியரிங் ஏஜெண்டுகள்,

32. கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை 1.

TELEGRAM RADHA TELEPHONE No 37

RADHA JEWELLERY HOUSE

BIG BAZAAR TIRUCHIRAPALLI

PROP: RADHAKRISHNA CHETTY

கல்யாண வெகுமதிகளுக்கேற்ற நவீன
டிசைன்களில் வெள்ளிப்பாத்திரங்களும் எல்லா
விதமான தங்க நகைகளும் உத்திரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்.

ராதா ஜுவல்லரி ஹவுஸ்

புரோப்ரைட்டர்: கோ. ராதாகிருஷ்ண செட்டியார்,

பெரியகடைவீதி :: திருச்சிராப்பள்ளி.

——CALL ON!

MODERN DISTRIBUTING COMPANY

"Importers From The Workshops Of The World"

65, SINGANNA CHETTY STREET, CHINTADRIPET

MOUNT ROAD, MADRAS-2

Grams: JEEPSPARE — 'Phone: 85550

P. B. No. 2241

TODAY'S AUTOMOTIVE WORLD REVOLVES AROUND
MANY BIG AND SMALL PARTS.
WE CAN SUPPLY ALL OF THEM

For

JEEP
CHEVROLET
DODGE
BEDFORD
G M C

AND OTHER CARS AND TRUCKS

"QUALITY GOODS" — "PRICED RIGHT"

THE MODERN AUTOMOBILES

417—A MOUNT ROAD **MADRAS-2**

Grams: MOBILE P. B. No. 322 Phone: 86765

YOUR MOST

DEPENDABLE SOURCE OF SUPPLY

FOR QUALITY AUTOMOTIVE

REPLACEMENT PARTS

For

ALL ENGLISH AND AMERICAN { CARS / TRUCKS }

FORDSON TRACTORS

And

PERKINS DIESELS

★ ★ ★

"EXPERIENCE LEADS TO SATISFACTION WITH US"

சேலம் ஸ்ரீ கன்னிகாபரமேஸ்வரி தேவஸ்தான ஜீர்ணோத்தாரண மஹா கும்பாபிஷேக மலர்.

24–5–54.

30 JUL 1956 MADRAS

ஸ்ரீ செட்டி-முத்யம் செட்டியார் அவர்கள்.

ஓம்

ஆலயம் அமைத்த அண்ணல்

(ஸ்ரீமான் எம். வி. கோபால் செட்டியார், சேலம்.)

நீர்வளமும் நிலவளமும் பண்பும் பணிவும் நிறைந்த தெய்வச் சோலையான நம் தமிழ் நாட்டில், 1890க்கு மேல் தெய்வீக ஒளி யொன்று வீசலாயிற்று. பாரமார்த்திகமும் கர்மானுஷ்டானமும் வாழ்வின் உயிர்நாடியென மக்கள் உணரலாயினர். அத்தருணத்தே நம் வைசிய உலகிலும் ஒரு புதிய சகாப்தம் தோன்றிற்று எனலாம் வைசியர்கள் வேதோக்த கர்மானுஷ்டானங்களை ஆசரிக்க அருஹதையுள்ளவர் கள் என்ற உண்மையை நிலைநாட்டி, ஆந்திர தேசத்திலுள்ள வைசியர்களிடையே த்விஜதர்மத்தைக் கடைப்பிடிக்கத்தக்க பேரு ணர்ச்சியை ஊட்டிய (டிஸ்ட்ரிக்ட் முனிஸீப் வேலையிலிருந்த) உபய பாஷாப்ரவீன-ஸ்ரீஸ்ரீஸ்ரீ-ஆத்மூரி-லக்ஷ்மீநரசிம்ம சோமயாஜுலு B.A., B.L. F.R.A.S., அவர்கள் நம் தென்னாட்டிலும் விஜயம் செய்து திருநெறித் தத்துவத்தைப் பிரசாரம் செய்யலாயினர். ஆலய வழிபாடு, த்விஜ தர்மம், நித்ய கர்மானுஷ்டான விதிகள் முதலியவற்றை அவர்கள் வாயிலாகத் தெளிவாயுணர்ந்த பெரியார் பலர் விரைவில் பின்பற்ற லாயினர்.

அவருடைய ஹிதோபதேசத்தில் ஈடுபட்ட சேலம், செவ்வாய்ப் பேட்டை, கோவை, சத்யமங்கலம் முதலிய நகரங்கள் ஆலய பிரதிஷ் டையிலும் வேதோக்த ஆசரணையிலும் ஊக்கம் கொள்ளலாயின. ஒவ்வொரு நகரிலும் ஒரு சில பெரியார்களின் பெரு முயற்சியாலும், மற்றவர்களின் ஒத்துழைப்பாலும், ஜகத்ஜனனியாகிய ஸ்ரீவாச வாம்பிகை ஆலயங்கள் தோன்றலாயின. அவற்றுள் ஒன்றுதான் நம் சேலம் ஸ்ரீ கன்னிகாபரமேஸ்வரி ஆலயமாகும். ஒவ்வொரு பெரிய காரியமும் இனிது நிறைவேற ஒவ்வொரு பெரியார் அவ்வக்காலத் தில் காரிய தீட்சை வகிப்பார். பெரியார்களின் காரியதீட்சை யின்றேல், மூர்த்தி, தலம், தீர்த்தங்கள் ஏற்படவோ, பலரும் திருவரு ளுக்குப் பாத்திரராகவோ இயலாது. அத்தகைய தெய்வீக சம்பத்

துடன் தோன்றிய ஒரு பெரியார்தான் இவ்வாலய ஸ்தாபனத்திற்கும் காரியதீட்சை வகித்தவர். அவர்தான் வைராக்கிய புருஷரான நமது மாபெருந்தலைவர் ஸ்ரீமான் செட்டி-முத்யஞ் செட்டியார் என்பவர்.

"மானவ சேவையே மாதவ சேவை" என்றும் "நரசேவையே நாராயண சேவை" என்றும் கொண்டு, தன் வாழ்நாள் முழுதும் பொதுநலத்திற்கே உழைத்து, தன்னைக் கடவுளுக்கும், அரசியலுக்கும் தேசத்திற்கும் (*God, Crown & Country*) அர்ப்பணம் செய்த மாபெருந்தலைவர் இவர்.

இவர் புண்ணியப் பொலிவுசான்ற செட்டி ஸ்ரீ ராமஸ்வாமி செட்டியாரும், கருணை கனிந்த ஸ்ரீபாலசுப்பம்மாளும் ஆற்றிய அருந் தவப்பயனாய் 1840-ல் அவனியில் தோன்றினர். 1929 வரை இவ்வுலகில் வாழ்ந்தார். இவருக்கு சுந்தரம் செட்டியார், சுப்ரமண்ய செட்டியார், அர்த்தனாரி செட்டியார், நவகோடி-நாராயண செட்டியார் என நான்கு சகோதரர்கள் உண்டு. இவருடைய சகோதரிகள் நால்வரில் பர்வதம்மாளை சேந்தமங்கலம் மிட்டாதாரர் ஸ்ரீ கிருஷ்ண செட்டியாருக்கும், கௌரம்மாளை-டிஸ்ட்ரிக்ட் முனிஸீபாயிருந்த ஸ்ரீ ஆதிநாராயண செட்டியாருக்கும், பாலநாகம்மாளை-செவ்வாய்ப் பேட்டை-ஸ்ரீ பெ. ராஜம் செட்டியாருக்கும், லக்ஷ்மியம்மாளை சேலம் ஊரக்கரை-ஸ்ரீ-கந்தசாமி செட்டியாருக்கும் திருமணம் செய்வித்தனர்.

செவ்வாய்ப்பேட்டை-ஸ்ரீ-முனியப்ப செட்டியாரின் குமாரத்தியும் அரியலூர்-ஸ்ரீ முத்துசாமி செட்டியாரின் தங்கையுமான திருமதி அலமேலுமங்கம்மையார் இவரது வாழ்க்கைத் துணைவியாக வாய்த்தனர்.

இவரது குமாரத்திகள் ஐவரில் பாலசுந்தரம்மாளை-சேலம்-எடப்பாடி-சுப்ரமண்ய செட்டியாருக்கும், ரங்கம்மாளை-சேலம் சில்லரைக்கடைத்தெரு-வாசுதேவ செட்டியாருக்கும், சீதாலக்ஷ்மியம்மையை-திவாகரம்-பங்காரு செட்டியாருக்கும், மஹாலக்ஷ்மியம்மையை-ஜட்ஜ்-சுந்தரம் செட்டியாருக்கும், தனலக்ஷ்மியம்மையை செவ்வாய்ப்பேட்டை P. R. பெத்தன்ன செட்டியாருக்கும் திருமணம் செய்து வைத்தனர்.

வேதமன்னார் செட்டியார், கிருஷ்ண செட்டியார், வரதராஜுலு செட்டியார் என்னும் இவரது குமாரர்கள் மூவருள் மூன்றமவர் மட்டுந்தான் இப்போது உள்ளனர். இவர் ஜவுளிதலால் வியாபாரம் செய்து கொண்டு வருகிறார்.

செட்டி முத்யம் செட்டியார் தம் பெயருக்கேற்ப 'முத்து' போலவே பிரகாசிக்கலானார். அவர் தம் குடும்பத்திலேயே 'முத்து' ஆனார். குலத்தை விளக்கும் குலவொளியுமானார். அவர் நாட்டுக்கும், நகருக்கும், சமூகத்திற்கும், சமுதாயத்திற்கும், ஆலயத்திற்கும் ஆத்மார்த்தத்திற்கும் ஆற்றியுள்ள அற்புதச் சேவைகள் அளப்பரியனவாம். அவையனைத்தையும் வாயினால் சொல்லி முடியாது, எழுதுவதென்றால் ஏடும், எழுத்தும் எங்கு தேடுவது? ஆதலால் ஏதோ ஒரு சிலவற்றை வாசகர்களின் நினைவிற்குக் கொண்டுவரலாம்.

இவர் இளம் வயதில் குலதர்மத்திற்கேற்ற கல்வியைப் பயின்ற பின், வியாபாரத்தில் ஈடுபட்டார். கைத்தறி ஜவுளி வியாபாரத் துறையில், ஒரு கைத்தறி பஜாரை நிறுவி, தலால் வியாபார நுட்பங்களை ஏற்படுத்திப் பலர்க்கும் உணர்த்தினார். அதனால் வியாபாரம் பெருகியது. தொழிலாளிகளுக்கும் பெருவாரியாகத் தொழில் கிடைத்தது. தொழிலும் மிக்க முன்னேற்றமடைந்தது. அக்காலத்தில்தான் சேலம் நூல், பட்டு ஜவுளியானது முன்னணியில் நின்றது. சேலம் 'தென்னாட்டு புனு' என்று போற்றப்பெற்றது. இவரது இளம்பிராயத்தில் ஏற்பட்ட ஊக்கமும், உணர்ச்சியும், கட்டுப்பாடும், பிரசாரமும் தான் இன்று சேலம் பஜாரை மங்களகரமான கைத்தறி ஜவுளிக் கடலாகக் காட்சியளிக்கச் செய்துள்ளது என்று கூசாது கூறலாம்.

இவருடைய 40வது வயதில், இவரிடத்துத் தெய்வீக உணர்ச்சி மிகுந்து வளரலாயிற்று. வைசிய குலத்தவர் ஒரான்வழியாக வழிபட்டுவரும் நம் குலதெய்வமாகிய ஸ்ரீ கன்னிகாபரமேசுவரிக்கு நம் சேலமாநகரில் ஒரு ஆலயம் இருக்க வேண்டியது அவசியமல்லவா? என்ற சிறந்த எண்ணம் இவரது சிந்தையில் அரும்பியது. குல மக்களின் பூர்வபுண்ணிய வினைவும், சேலமாநகரில் தேவி வாசவியின் திருவருளுற்றுப் பெருக வேண்டிய காலமும் ஒருங்கு கலந்தன. ஆதலால் இவரது வேட்கையை நிறைவேற்ற வேண்டியது அவசியம் தான் எனப்பலரும் ஆமோதித்தனர். இவருடைய ஒப்பற்ற ஊக்கமும் முயற்சியும் அவர்கள் அனைவரையும் கூட்டிற்று. ஒரு காரியம்

ஆகவேண்டுமானல் அதற்கு இடம், பொருள், ஏவல் எனும் மூன்றும் தேவை. அவற்றுள் முதலாவதான இடம் வேண்டுமே என்றனர்.

இப்பொழுதுள்ள கோயிலில் ஸ்ரீராமபிரான் எழுந்தருளியுள்ள இடம் அப்போது பஜனை மடமாக இருந்தது. அதற்குக் கிழக்கே நம் குலவத்தவரான தம்பையா என்பவர் தெலுங்கு பாடசாலை நடத்தி வந்தார். அர்த்தப்பல்லி-கந்தசாமி செட்டியார் என்பவர் அவ்விடத்தைத் தெலுங்கு பாடசாலை நடத்துவதற்கெனப் பொதுவுக்குக் கொடுத்திருந்தார்.

விசாலமாகக் கோயில் அமைய வேண்டும். அதற்கேற்ற இடம் தக்க ஸ்தானத்தில் வேண்டும் "புரிகினு ப்ராணமு கோமடி" என்றனர் ஆன்றோர். அதாவது 'ஒரு நகரின் ஜீவனாடி வைசியன்' என்பதாகும். சகலருக்கும் பயன்படவேண்டிய சகல செல்வங்களையும் ஜாக்ரதையாய்க்காத்து, தக்க முறையில், தக்க தருணத்தில், தக்கார்க்கு உதவ வேண்டிய பொறுப்பு வைசியரைச் சார்ந்தது. அதனால், இவரது இருக்கை ஊரின் ஹ்ருதயஸ்தானத்தில் இருக்க வேண்டும் என்பது ஆன்றோர் கருத்து. இத்தகையோரது வழிபடு கடவுளும், குலதெய்வமும், லோக ரக்ஷகியுமான அம்பிகையின் ஆலயமும் அதே ப்ரதான வீதியில் அமையவேண்டும் என்பது இவர்கள் கருத்து. இந்த இடந்தான் அதற்கு மிகவும் பொருத்தமான இடம் என எண்ணினர். அச்சமயம் பொதுவுக்கு இருந்த இடம் கோயில் கட்டப் போதுமானதல்ல. என்ன செய்வது என ஆலோசித்தனர்.

த்யாகசீலரான இவருக்கு உடனே ஒரு உணர்ச்சிதோன்றியது. "அருகிலுள்ள என் வீட்டை நம் குலதேவதையான ஸ்ரீ வாசவி ஆலயமாக மாற்ற நான் பரிபூரணமாகச் சம்மதிக்கிறேன்; உடனே ஆலயம் அமைக்க ஏற்பாடு செய்வோம்" என்றனர்.

அவருடைய வீடு இன்று தேவாலயமாகக் காட்சியளிக்கிறது. அவரது புண்யமும், தியாகமும், மனோபரிபாகமும் இன்னும் இவ்விடத்தில் உயர்மணம் வீசுகின்றன. அத்தகைய புனித இடத்தில் தான் நாம் இன்று ஷஷ்டி வத்ஸர புனப்ரதிஷ்டா வைபவம் கண்டு இன்புறக் குழுமியுள்ளோம்.

நம் தலைவரின் திடசங்கல்பத்தையும், பொதுநல உணர்ச்சியையும் கண்டு வியந்து உவந்த மற்றவர்கள், இவர் குடியிருப்பதற்காக வேண்டி, தற்காலம் (ஸ்ரீ ராம விலாசத்துக்கு எதிரிலும், ஸ்ரீ C. R. B.

வீட்டுக்குப் பக்கத்திலுமுள்ள) வீட்டை, இவருக்கு வாங்கிக் கொடுத்தனர். தெலுங்குப் பள்ளிக்கூடம் நடத்திய ஸ்ரீ தம்பைய்யா அவர்களும், காமாட்சியம்மை கோயிலுக்கெதிரில் உள்ள தன் சொந்த வீட்டிற்குப் பள்ளியை மாற்றிக்கொண்டார்.

ஆலயம் அமைப்பதற்காக நம் தலைவர் ரூ 2000 வழங்கினர். அன்பர் பலரும் தத்தம் சக்திக்கேற்ப உதவினர். முத்யம் செட்டியாரின் முழு முயற்சியாலும், உடனிருந்த பலரின் ஒத்துழைப்பாலும் 1894-ல் அம்பிகை ஆலயம் வேலை பூர்த்தியாயிற்று. **ஜய-வருடம் வைகாசி-மாதம் 12-உ வியாழக்கிழமை வைசாக பகுள பஞ்சமி, சிரவண நட்சத்திரம் கூடிய நன்னாளில் தேவதாப்ரதிஷ்டையும், கும்பாபிஷேகமும் முறைப்படி நடந்தது.** சித்திரை-மீ 29 உ (10—5—1894) யன்றே நம் தலைவர் வைசிய மஹாஜனங்கள் யாவரையும் ஒன்றுகூட்டிக் கோயில் நிர்வாகம் எவ்வெம் முறையில் நடைபெறவேண்டும் என்று ஆலோசித்துத் தீர்மானித்து ரிகார்டு செய்துவைத்தார். இவ்வாலயத் தோற்றத்திற்கு ஆதிகாரணரான இவர், தமது ஆயுட்காலம் முழுதும் இக்கோயில் நிர்வாகக் குழுவின் தலைவராக இருக்கவேண்டும் என எல்லோரும் ஏகமனதாகத் தீர்மானித்தனர். தலைவருக்கு உதவியாக மற்றும் ஐந்து டிரஸ்டிகள் இருக்கவேண்டுமென்றும் தீர்மானித்தனர். ஜவுளிக்கடைத்தெருவிலும், சில்லரைக்கடைத் தெருவிலுமுள்ள நமது குல மக்கள் கூடி, 20 கமிட்டி மெம்பர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும், பிறகு அவர்கள் ஐந்து டைரக்டர்களைச் சீட்டுப் போட்டுத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும், ஆண்டுக்கொருமுறை இந்தத் தேர்தல் நடைபெறுவதென்றும் தீர்மானித்தனர். அதே முறையில்தான் இன்றும் இவ்வாலய நிர்வாகம் நடந்து வருகிறது.

கோவிலைக்கட்டிக் கும்பாபிஷேகம் செய்தபின், "கோயிலைக் கட்டி முடித்துவிட்டோம்; வேலை தீர்ந்தது' என்று அகமகிழ்ச்சி கொண்டவராய், தம்வேலையைப் பார்த்துக்கொண்டு வீட்டில் உறங்க வில்லை நம் தீரபுருஷர். கோயிலில் தொடர்ந்து நடைபெறவேண்டிய நித்யபூஜை, உத்ஸவாதிகள் முதலியன இனிது நடைபெறவேண்டி, அதற்கேற்ற ஸ்தாவர ஜங்கம சொத்துக்களைச் சேர்க்கவும், அமுதுக்கு வேண்டிய சாதனங்களை அமைக்கவும், சந்தர்ப்பணைக் கேற்ற சத்திரங்களைக் கட்டவும் தேவையான பிரயத்தனங்களைத் திடசங்கலபத்துடன் மேற்கொண்டார். அவ்வகையில் ஒரு வருட

காலம் அல்லும் பகலும் உழைத்து, சின்ன திருப்பதி க்ஷேத்திரத்தில் ஸ்ரீநிவாஸப்பெருமாள் திருக்கோயில் முன்னர், கார்த்திக வனபோஜன கைங்கர்யத்திற்கேற்றவாறு ஓர் சத்திரம்கட்டி முடித்தார். இவருடைய சுயநல மற்ற தூய எண்ணங்களையும், திட சங்கல்பத்தையும், சோரா உழைப்பையும், கண்டு உவந்த வைசியா மகாஜனங்களனைவரும் இவரோடு பூரண திருப்தியோடு ஒத்துழைக்கலாயினர். 1922-ல் துந்துபி-ஸ்ரீ சைத்ர சுத்த நவமி குருவாரம் புஷ்யமி நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில், இந்த தேவஸ்தானத்தில் ஸ்ரீ ஸீதா லக்ஷ்மண ஹநுமத்சமேத ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தி ப்ரதிஷ்டையும் மங்களகரமாக நடைபெற்றது. இவருடைய யாஜமான்யத்தில் இவ்வளவு சவுகரியங்களும் சிறப்பும் சமூக மக்களுக்கு ஏற்பட்டதை எண்ணி அனைவரும் பெருமகிழ்வெய்தினர். இன்றைய புன:ப்ரதிஷ்டா கும்பாபிஷேகத் தலைவராக விளங்கும் உயர்திரு. ராவ்சாஹேப் - D. P. சென்னகிருஷ்ண செட்டியார் அவர்கள் இவருடைய வலது தோள்போல விளங்கினர். சமூகக் கட்டுப்பாடும் பலரது ஒத்துழைப்பும் கலந்துகொண்டதால் இவரது சிறந்த முயற்சிகள் யாவும் பொன்மலர் மணமும் பெற்றதுபோலப் பொலிவுறலாயின.

தெய்விக விஷயங்களிலும் சமூகப்பணிகளிலும் இத்தகைய சேவை செய்த இவர் பொதுநலத்துறையிலும் சிறந்து விளங்கினர். இவர் வேறு ஒருவரும் போட்டியின்றி 30 வருடகாலம் முனிஸிபல் கவுன்ஸிலராயிருந்தார். இவர், தன் வார்டை மட்டும் கவனிப்பதில் ஊக்கம் செலுத்தாது, நகர மொத்தத்திற்கும் தேவையான நன்மைகள் அனைத்தையும் நாடுவார். தன்னாலியன்ற வரை, நகரில் எங்கும் எத்தகைய சிக்கல்களும் இன்றி, யாவரும் சுமுகமாக வாழவேண்டிப் பாடுபடுவார். எங்கு சிறிது சிக்கல் உளதாகத் தோன்றினும், உடனே சென்று பஞ்சாயத்து கூட்டி மத்யஸ்தம்பேசி சுமுகமான முறையில் சமாதானப் படுத்திவிடுவார். இவருடைய நற்கருத்துக்கு எத்தகையோரும், எவ்வருணத்தோரும், எப்பாங்கினரும் இசைந்து வந்துவிடுவர். நகரபரிபாலன முறையிலும் ஏனைய அங்கத்தினர்களோடு சுமுகமாகக் கலந்து, எத்தகைய மனத்தாங்கலோ, கட்சிகளோ, வேற்றுமைகளோ, ஏற்பட்டுச் சிதராவண்ணம் நேர்மையான முறையில் கவுன்ஸிலைப் பாதுகாத்தார். கனம் ராஜாஜி அவர்கள் சில மாதங்கள்முன் போக்ஸ் ஹாலில் பேசியபோது, தாம் சேர்மெனாக இருந்த காலத்தில் நகரபரிபாலனம் எவ்வாறு செவ்வனே

நடைபெற்றதென்றும், கட்சி பிரதி கட்சியின்றி, ஸ்ரீ செட்டி-முத்தய்யம் செட்டியார் அவர்களின் ஆலோசனைகளும் தீர்மானங்களும், எவ்வாறு அங்கீகரிக்கப்பட்டு செயற்பட்டன என்றும் மகிழ்வோடு புகழ்ந்து கூறினர் என்றால் இவரது பெருந்தன்மையை நாம் என்னென்று கூறமுடியும்? இவரது போக்கைக்கண்டு 'லாங்லி' (or) 'லீ' என்னும் கலெக்டர் துரையவர்கள் இவரை ஒரு கூட்டத்தில் 'நீர் உம்வார்டுக்காக மாத்திரம் பாடுபடாமல், எல்லா வார்டுகளுக் காதவும் என் பாடுபடுகிறீர்?' என்றார். உடனே இவர், 'நான் ஒரு வார்டுக்கு மட்டும் பாடுபடப் பிறக்கவில்லை. சேலம் ஜில்லா முழுதுக்குமே பாடுபடப்பிறந்துள்ளேன். அனைவரின் சுகத்தையும் நாடி உழைக்கவேண்டியதே என்கடமை" என்றார். கலெக்டரும் சபையினரும் வியப்பும் உவப்பும் அடைந்தனர். கலெக்டர் துரை "இவரே நகர பரிபாலனத்திற்கேற்ற நற்செயலாளர்" எனப் புகழ்ந்து மகிழ்ந்தார்.

1911-ல் சேலத்தில் பிளேக் வந்தபோது இவர் செவ்வாய்ப் பேட்டையில் தங்க நேர்ந்தது. அச்சமயம் இவர் நகரசபையில் மிகவும் மன்றாடி செவ்வாய்ப்பேட்டையில் பொதுநல உபயோகத் திற்கென 6, 7, குழாய்கள் ஆங்காங்கு அமைக்கச்செய்தார்.

தனிகர், ஏழை, பெரியோர், சிறியோர் என்ற பாகுபாடே இவரது உள்ளத்தில் தோன்றாது. "அனைவருக்காகவும் வாழ்நாள் முழுவதும் உழைப்பதே நம் கடமை" என்ற தீவிர நோக்கத்துடன் கடைசிவரை பொது நலத்துக்காகவே உழைத்தார்.

1919 சுமாரில் மற்றொருமுறை பிளேக் வந்தது. "யாவரும் இனகுலேஷன் செய்துகொண்டாக வேண்டும்" என அரசாங்க உத்தரவு பிறந்தது. ஏழை நெசவாளிகள் ஒருநாள் கைத்தறி நெசவு செய்யவில்லையானல் அவர்கள் வீட்டில் அனைவரும் பட்டினி கிடக்க நேரும். இனகுலேஷன் செய்து கொண்டால் 3-நாள் தறி நெய்ய முடியாது. ஆதலால் அந்த ஏழை நெசவாளிகளுக்காக இரக்கம் மிகுந்த இவர் பரிந்துபேசி, இனகுலேஷன் செய்துகொள்ளும் ஒவ்வொரு நெசவாளிக்கும் 3-நாள் ஊதியம் கவர்ன்மெண்டார் ரொக்கமாக இனம் கொடுக்குமாறு செய்வித்தார். இவர் ஏழை மக்களுக்காக இவ்வளவு தீவிரமாகப் பாடுபடுவதைக்கண்ட கலெக்டர் துரை முதலிய அரசாங்க அலுவலர் அனைவரும் வியந்து புகழ்ந்தனர்.

நாமகிரிப்பேட்டையில் வைசிய சமூகத்தாரைச் சேர்ந்த ஸ்ரீ வேணுகோபாலஸ்வாமி ஆலய சம்பந்தமாக ஏற்பட்ட தகராறை இவர் சுமுகமாகத் தீர்த்து சமாதானம் செய்து வைத்தார். எல்லா ஜாதியினரும், எல்லாவகையான மனப்பாங்குடையவரும் இவருடைய தீர்மானத்திற்கு இசைந்து ஒப்புக்கொண்டு சமாதான மாகிவிடுவர்.

இவ்வுலகில் இவருக்கு யாருமே விரோதியில்லை. எந்த உயிரும் இவரை விரோதியாய்க்கருதாது விரோத பாவனையில் வருபவனும், இவரை நெருங்கியதும், இரவது புன்னகை முகத்தையும் இன்மொழி யமுதையும் கண்டதுமே உகந்த நண்பனாக மாறிவிடுவான். இது இவருக்கு இயற்கையில் வாய்த்த ஒரு அபூர்வ சக்தியாகும்.

அக்காலத்தில் இருந்த அரசாங்க உத்தியோகஸ்தர்கள் அனை வரும் இவர் வீட்டுக்குவந்து, இவரைக் கண்டுபேசி, பொதுஜனங் களுக்கு என்ன நன்மைகள் எவ்வகையில் செய்யவேண்டும் என்று கேட்டுத் தெரிந்துகொண்டுபோய், அவ்வாறு நன்மைகளைச் செய்வது வழக்கம் என்றால் இவருடைய சிறப்பை என்னென்று இயம்ப முடியும் ?

இவருடைய ஜீவிதத்தில் காணும் ஒரு முக்யமான படிப்பினை என்னவென்றால், பொது நலக்காரியங்களின் பொருட்டு, குதூகலத் துடன் உத்ஸாகம் (Emotion) மேலிட்டு வருபவர்களுக்குத் தக்கபடி நிதானமாகப் பதில்செல்லி, காரியம் கெடாது நடக்குமாறும், என்றும் நிரந்தரமாக நடக்குமாறும், அவ்வக்காரியத்தின் தன்மைக்கேற்ப நல்ல திட்டங்களை வகுத்துதந்து, அவர்களுடைய ஊக்கத்தை வளர்த்து, கொள்கையையும் ஊர்ஜிதப்படுத்தி, காரியமும் கல்மேல் எழுத்துப்போல் நிலவச் செய்துவைப்பார். இவரது கொள்கைகளும், திட்டங்களும், செயல்நுட்பமும், இணையிலாப்புகழும் எல்லோரது உள்ளத்திலும் இடம் பெறுமாக

நிற்க ஆத்தோரத்திலுள்ள சத்திர கட்டிடங்கள் 4 ம் தேவாலய பிரதிஷ்டைக்கு முன்னமேயே பெரியோர்களால் ஏற்பட்டுள்ளது. இப்போது வைஸ்ய சமுதாயத்திற்கேற்ப மாறுதல்கள் செய்ய வைஸ்ய சமூகம் ஊக்கத்துடன் யோசித்து வருகிறார்கள்.

சென்ற ஜய வைகாசியில் 1894-ல் நடந்த கும்பாபிஷேகத்தில் ஸ்ரீமான் செட்டி முத்யம் செட்டியார் தலைமை தாங்கினார். இந்த ஜய வைகாசியில் (1954) நடைபெறும் இந்த புனப்ரதிஷ்டை கும்பாபிஷேகத்திற்கு அவரது வலது புஜமான ஸ்ரீமான் ராவ்சாஹப் D. P. சென்னகிருஷ்ண செட்டியார் அவர்கள் தலைமை தாங்குகிறார். அப்போது மானேஜ்மெண்டு முத்யம் இப்போது மானேஜிங்டிரஸ்டி மாணிக்கம். அறுபது ஆண்டுகளில் முத்து மாணிக்கமாயிற்று. நவயுகத்திற்குத் தேவையான எல்லாவகைத்திருவையும் நவரத்ன மணிகளாக ஒளிவகைகளாக அருளுமாறு அம்பிகை வாசவியின் அம்புஜ பாதங்களை வழுத்துவோமாக!

சுபம்.

இம்மாபெரும் பெரியாரது ஜீவ்ய சுருக்கத்தை எழுதும்படி அடியேனுக்கு ஆக்ஞாபித்த மஹா கும்பாபிஷேக கமிட்டியார்களுக்கு பரிபூர்ண நன்றியும் வணக்கங்களும் உரித்தாகுக.

எங்களிடம்
திடமான
காப்பிக் கொட்டையும்
காப்பித் தூளும்
எப்பொழுதும்
கிடைக்கும்

Props :
சூரா சுப்பராய
செட்டியார்
& சன்ஸ்
H. O. கன்னங்குரிச்சி

பிராஞ்சுகள்:—செர்ரி ரோட், சேலம் & செவ்வாய்ப்பேட்டை.

ஸ்ரீ துவாரகநாதர் பாங்க் லிமிடெட்,

மெயின்ரோட், செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

ஸ்தாபிதம் 1931.

வசூலான மூலதனம்	...	...	ரூ. 1,00,000
ரிசர்வ் பண்டும் இதர ரிசர்வுகளும்		...	,, 50,000
டிபாசிட்டுகள்	...	...	,, 4,00,000

பிக்சட் டிபாசிட்டுகள் 1 வருட வாய்தாவிற்கு 5¼ % p. a.
6 மாத வாய்தாவிற்கு 4½ % p. a.
வீதம் பெற்றுக்கொள்ளப்படும்.

எல்லாவிதமான பாங்க் அலுவல்களும் நடத்தப்படும்.

T. R. நாராயணசாமி அய்யர் B. A.,
காரியதரிசி.

P. A. மாணிக்கம் செட்டி,
பிரசிடெண்ட்.

★ எவரெஸ்ட் ஸ்டுடியோ ★

முதல் அக்ரஹாரம், :: சேலம்.

வியாபார விளம்பரத்திற்கு மிகச் சிறந்த 16 M. M. சினிமாபடங்கள் மூலம் விளம்பர படங்கள் தயாரித்தல்.

பள்ளிக்கூடங்களிலும் கலியாணம் முதலிய விசேஷ காலங்களில் 16 M. M. சினிமா படங்கள் அவரவர்கள் இடத்திலேயே காண்பித்தல்.

சினிமாவில் நடிக்க விருப்பம் உள்ளவர்களுக்கு சினிமா படங்களும், ஸ்டில் போட்டோக்கள் எடுத்துக்கொடுத்தல்.

முக்கிய தஸ்தாவேஜுக்கள் புதிய அமெரிக்க மிஷினுல் எந்த கலர் இங்க் பென்சல், கைரேகை, ஸ்டாம்பு முதலியன தத்ரூபமாய் எடுத்துக் கொடுத்தல்.

Tel: "KOTA" Estd.: 1944. Phone: 196-A.

30 JUL 1956

மாருதி பாங்கு,

சேலம்.

(Incorporated in 1944 under the Indian Partnership Act. 1913.)

Partners:

K. G. M. GOVINDARAJULU CHETTIAR,
K. G. M. GOPAL CHETTIAR,
K. A. SANJEEVI CHETTIAR,
P. N. KAMATCHI CHETTIAR & HIS SONS.

Specializing in short term advances to merchants only.

All kinds of Banking business undertaken.

Working of the Bank, at a glance as on 1—5—1954.

Capital & Reserves	285000—0—0	Bank buildings	17000—0—0
Fixed deposits	401000—0—0	Govt Pro. Notes	105000—0—0
Bank fecilities	188000—0—0	Advances	778000—0—0
Profits	61000—0—0	Expences	29000—0—0
		Cash balance	6000—0—0
	935000—0—0		935000—0—0

K. Govindarajalu,
Partner.

Krishnamoorthi B. A.,
Agent/Partner.

Rounded up to thousands.

VASANTHA INDUSTRIALS

KANNANKURICHI P. O. (Salem Dt.)



3 JUL 1956

Pro : B. K.] **Improved GLOBE Coffee Roaster.** [Model 1954

நவீன ரகங்கள் ! உத்திரவாதமுள்ள நகைகள் !

NEO CHANDRA JEWELLERY MART

BAZAAR STREET, SALEM.

எங்களிடம் ரெடிமேட் பவுன் நகைகள்
வெள்ளிப் பாத்திரங்கள் எப்போதும் கிடைக்கும்.

ஸ்பெஷல் ஆர்டர் நகைகள், வெள்ளி சாமான்கள்
குறித்த காலத்தில் செய்து கொடுக்கப்படும்.

நியூ சந்திரா ஜுவல்லரி மார்ட்

(Pros: Y. P. கந்தசாமி செட்டி, Y. P. நவநீதம் செட்டி)

கடைவீதி, சேலம்.

30 JUL 1956

PHONE : 129

GUPTHA AGENCIES

PHARMACEUTICAL CHEMISTS & DRUGGISTS

FIRST AGRAHARAM :: SALEM

Sera & Vaccines kept under Refrigeration

All kinds of Drugs, Patent Remedies, Surgical Appliances, Children's and Invalids' diet etc.

Available at Competitive Rates

A TRIAL IS SOLICITED.

எங்களிடம் சகலவித பேடண்ட் மருந்துகள் எப்போதும் கிடைக்கும்.

டாக்டர்கள் சீட்டுக்கு மருந்துகள் தயாரித்தும் கொடுக்கப்படும்.

குப்தா ஏஜன்ஸீஸ்

இங்கிலீஷ் மருந்து ஷாப்,

முதல் அக்ரஹாரம் :: சேலம்.

மணமிகுந்த
சத்தியநாராயண
காப்பியை அருந்துங்கள்.

தயாரிப்பவர்:- சத்தியநாராயண காபி ஒர்க்ஸ்
மெயின் ரோட், சேலம் — H.O. கன்னங்குறிச்சி.

உத்திரவாதமுள்ள நகைகள் & வெள்ளிபாத்திரங்களுக்கு
சேலம் ஸ்டோர்ஸ்
ஷராப் வியாபாரம்
கடைவீதி, சேலம்.

SALEM STORES
MFG. JEWELLERS
BAZAAR STREET,
SALEM.

30 JUL 1956

ஸ்தாபிதம் 1905

ராம விலாஸ்

S. N. ராமஸ்வாமி செட்டியார் & பிரதர்ஸ்,

396, கடைவீதி, சேலம்.

தந்தி : சிவம். போன் : 102.

கலியாண
விசேஷங்களுக்கு
பெனரஸ், பெங்களூர்
கராச்சி, காஞ்சீபுரம், பட்டு
சேலைகள், அழகிய நவீன பார்டர்களில்
கண்ணைக்கவரும் கலர்களில் புதிய ஸ்டாக்குகள்
வந்திருக்கின்றன.

சகலவிதமான வெண்பட்டுகள்,
ஜரிகைபேட் வேஷ்டிகள்,
துப்பட்டாக்கள், நூல் சேலைகள்
முதலிய ரகங்களும்
குறைந்த விலைகளில்
கிடைக்கும்.

★ ★

RAMA VILAS, SALEM

ஸ்தாபிதம்: 1930. ரிஜிஸ்டர் நெ. 122205.

பெங்களூர், பெனரஸ், காஞ்சீபுரம்,
மற்றும் பலவூர் பட்டு சேலைகளும்,
கான்பூர் சால்வைகளும்,
கம்பளி ரகங்களும்
கிடைக்கும்.

பி. ஆர். & சன்ஸ்

381, கடைவீதி சேலம்.

ஜவுளி வியாபாரம்,

சேலம் வெண்பட்டு
வேஷ்டி துப்பட்டாக்களும்,
மற்றும் பலவூர்
கைத்தறி, மேட்டூர் மில், B. & C. மில்
ஜவுளியும் மற்ற மில் ஜவுளி ரகங்களும் கிடைக்கும்.

சூரியன்

S 41

சோப் சலவைக்குச் சிறந்தது.

தயாரிப்பவர்கள் :—

குமரன் சோப் ஒர்க்ஸ்,

த. பெ. நெ. 44, ஈரோடு.

விற்பனை டிப்போக்கள் :-

கோயமுத்தூர், திருச்சி, கரூர்.

போன் 146 Tel: BULLION P. B. No. 47.

உத்திரவாதமுள்ள

முத்து, வைரம், கல் நகைகள், நெக்லஸ்கள்,

பவுன் நகைகளுக்கும் வெள்ளி சாமான்களுக்கும்

பிரக்யாதி பெற்ற இடம்

கும்பகோணம் வெள்ளிப்பாத்திரக்கடை

"ஸ்வர்ணமாளிகை"

கடைவீதி, சேலம்.

வாடிக்கையாளர்களின் சவுகரியத்தை முன்னிட்டு நவீன தினுசுகளில் கால்செயின், கொலுசு வகையறுக்களை வைத்திருக்கிறோம்.

Proprietors:

A. V. ராமச்சந்திர செட்டியார், A. N. ஸ்ரீனிவாச குப்தா.

சேலத்தில் தங்குவதற்கு

வைஸ்யா மாடர்ன் ஹோட்டல்

(போர்டிங் & லாட்ஜிங்)

போலீஸ் ஸ்டேஷன் எதிரில், சேலம் டவுன்.

டவுன் மத்தியில், கடைத்தெரு, தலைமைத் தபாலாபீஸ், கச்சேரி, ஆஸ்பத்திரி, தேவாலயங்கள், பேங்குகள் இவைகளுக்கு மிக அருகில் இந்த இடம் அமைந்துள்ளதால், தங்கும் ஜனங்களுக்கு எல்லாவகைக்கும் சௌகரியமாக உள்ளது.

— ஆரோக்கிய முறையில் சுவைமிக்க உணவு —

தங்குவதற்கு தக்க வசதியுள்ள நம்பிக்கையான இடம்.

A Comfortable place for BEST MEALS & STAY

VYSYA MODERN HOTEL, Opposite Police Station,

(BORDING & LODGING) Salem Town.

Very near to Main Bazaar, Head Post office, Court, Hospital, Temples & Banks etc)

Pro: K. PANCHANATHAM.

துணிகளை தூய்மைப் படுத்த

DIAMOND

TRADE MARK

WASHING SOAP

"டைமண்ட்" சோப்புகள் சிறந்தது.

தயாரிப்பவர்கள் :-

PHONE: 208 TELEGRAM: SOAP

டைமண்ட் சோப்பு இண்டஸ்ட்ரீஸ்,

செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

உ

ஸ்ரீ வாஸவி சகாயம்

பூரி ஜகந்நாதம், ஸ்ரீ கோவர்த்தன பீடாதிபதி

யோகீஸ்வரானந்த தீர்த்தர்,

ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்கள் அருளிய

ஸ்ரீ வாசவ கன்யகாபரமேஸ்வரி அம்மன்

தியான ஸ்தோத்திரம்

ஸ்ரீ கன்யகாபரமேஸ்வர்யை நம :

பஜேஹம் த்விபுஜாம் பாலாம்
சஸ்வத் கல்யாண தாயிநீம் !

கிரீட ஹார கேயூர—
குண்டலாதி விபூஷிதாம் !!

வாமே வரத ஹஸ்தாம் ச
ஸவ்யே பங்கஜ தாரிணீம் !

வர்ஷந்தீம் ப்ரேம பீயூஷம்
ப்ரஸன்ன முக பங்கஜாம் !!

எல்லோரும் தியானம் செய்யக் கோரப்படுகிறது.

வெளியிட்டவர் :

பி. என். நாகமாணிக்கம் செட்டியார்,
மானேஜிங் டைரக்டர்,
பி. என். என். பாங்க் லிமிடெட்,
செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

தந்தி : "FINANCE" டெலிபோன் எண் : 192.

30 JUL 1956

ஓம்

சேலம் ஸ்ரீ வாசவ கன்னிகாபரமேஸ்வரி கோயிலில் நடைபெறும் பூஜைகள் விழாக்கள் முதலியன.

நித்திய பூஜை.

1. **விசுவரூபதரிசனம்** : காலை மணி 7-30 க்குள் நடைபெறும்.
உபயதாரர் : சேலம் ஸ்ரீ குரிச்சி-பாலகிருஷ்ண செட்டியார் அவர்கள்.

2. **காலை சந்தி:** காலை மணி 9-க்குள் நடைபெறும் } தேவஸ்தான
3. **சாயங்கால பூஜை** : இரவு மணி 8-க்குள் நடைபெறும் } கட்டளை

நித்தியப்படி இரண்டாவது மூன்றாவது காலம் பூஜைக்குத் தளிகைக்காக நெல் உபயமாக அளிப்பவர்கள்:— சேந்தமங்கலம் மிட்டாதாரர்கள் ஸ்ரீ M. K. சீதாராம செட்டியார் அவர்கள் வகையரா.

வார உத்ஸவம்

1. **சுக்ரவார உத்ஸவம் :**

பிரதி வெள்ளிக்கிழமையும் ஸ்ரீ அம்பிகைக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனை பிரசாத விநியோகம். (கீழ்காணும் அன்பர்கள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை உத்ஸவம் நடத்துபவர்கள்.)

1. ஸ்ரீ தி. நா. காசிவிஸ்வநாத செட்டியார், ஜவுளி, சேலம்.
&
,, A. பாஸ்கர செட்டியார் ,, ,,
2. ,, S. N. ராமஸ்வாமி செட்டியார் & பிரதர்ஸ் ,, ,,
3. ,, S. V. ராதாகிருஷ்ண செட்டியார், ,, ,,
4. ,, P. A. மாணிக்கம் செட்டியார், ,, ,,
5. ,, N. P. ராஜமாணிக்கம் செட்டியார், ,, ,,
6. ,, J. விஸ்வநாத செட்டியார், மளிகை. ,,
7. ,, மே. பா. ஜெயராம செட்டியரர், ஷராப் வியாபாரம், ,,
8. ,, P. ராமநாத செட்டியார், கடலைக்கடை, ,,
9. ,, A. R. தண்டாயுதம் செட்டியார், மண்டி, ,,

10. ,, D. V. நாகமய்ய செட்டியார், ஜவுளி, சேலம்.
11. ,, ஆத்தூர். V. ராதாகிருஷ்ண செட்டியார் ,, ,,
12. ,, B. நாகமய்ய செட்டியார் ,, ,,
13. ,, V. S. ராஜகோபால் செட்டியார், பேப்பர் வியாபாரம் ,,
14. ,, A. K விஸ்வநாத குப்தா, ஜவுளி வியாபாரம், ,,
15. ,, T. B. நந்தகோபால் செட்டியார், ஜவுளி, சேலம்.
16. ,, R. சக்ரபாணி செட்டியார், ,, ,,
17. ,, T. G. சதாசிவம் செட்டியார், ,, ,,
18. ,, N. T. புருஷோத்தம செட்டியார், ,, ,,
19. ,, ப. சு. மு. ராஜகோபால் செட்டியார் ,, ,,
20. ,, P. L. பாலவெங்கட்ராம செட்டியார்,
அக்கௌண்டண்ட். ,,
21. ,, G. K. வாசுதேவ குப்தா, இரும்பு வியாபாரம், சேலம்,
22. ,, K. பஞ்சநாதம் செட்டியார், Prop: வைசியா மாடர்ன் ஹோட்டல் &
V. A. குப்புசாமி செட்டியார் சோடாகடை, சேலம்.
23. ,, K. வெங்கட்ராம செட்டியார், சில்லரைக்கடை, சேலம்.
24. ,, E. A. P. நாராயண செட்டியார், ஷராப்கடை, ,,
25. ,, M. B. பங்காரு செட்டியார், ஜவுளி, ,,
26. ,, அ. கோ. பாலமுனியப்ப செட்டியார், மளிகை, ,,
27. ,, A. ராமலிங்க செட்டியார், ஷராப் வியாபாரம், ,,
28. ,, ரா. அ. தாசப்ப செட்டியார், சில்லரைக்கடை ,,
29. ,, அ. ராஜு செட்டியார், பீடாக்கடை, ,,
30. ,, K. நவநீதம் செட்டியார், ஜவுளி, ,,
31. ,, B. கிருஷ்ணமூர்த்தி செட்டியார், பீடாக்கடை, ,,
32. ,, S. A. சாமி செட்டியார், மளிகை வியாபாரம், ,,
33. ,, A. V. ராமசந்திர செட்டியார், கும்பகோணம் சில்வர்ஷாப்
34. ,, K. M மீனாட்சிசுந்தரம் செட்டியார், ஜவுளி, சேலம்
35. ,, M. தியாகராஜ செட்டியார், குதிரை மார்க் காப்பி பௌடர் வியாபாரம், சேலம்
36. ஸ்ரீமதி அம்புஜம்மாள்
C/o ஸ்ரீ E. G. லக்ஷ்மண செட்டியார் Prop: சேலம் கேப்.
37. ஸ்ரீ B. S. கிருஷ்ணமூர்த்தி செட்டியார்
K. G. M. ஸன்ஸ், ஜவுளி தலால், சேலம்
38. ,, R. சந்தான கோபால கிருஷ்ண
செட்டியார் & பிரதர்ஸ், ஜவுளி தலால் ,,
39. ,, தி. மு. வெங்கடாஜலம் செட்டியார், சேரிடி
ஸ்ரீ தி. கா. காசி விஸ்வநாத செட்டியார், ஜவுளி, ,,

40. ,, ஸ்ரீ L. S. சுந்தரம் செட்டியார் ஸன்ஸ்
Props: ராதாகிருஷ்ண ஸ்டோர்ஸ், ஏற்காடு, சேலம்
41. ,, K. M. சுப்ரமண்ய செட்டியார், & T. A. துரைராஜ்
அவர்கள் ஜவுளிதலால், ,,
42. ,, மி. வெ. தண்டாயுதபாணி செட்டியார், அரிசி மண்டி, ,,
43. G. பத்மநாப செட்டியார் ரேஷன் ஷாப் & மண்டி
செவ்வாய்பேட்டை ,,
44. ,, D. V. கோவிந்தராஜுலு செட்டியார்,
கோகுல் ஜுவல்லரி மார்ட், ,,
45. ,, M. S. ராஜகோபால் செட்டியார் M S. R ஷாப் ,,

2. சனிவார உத்ஸவம்.

பிரதி சனிக்கிழமையும் ஸ்ரீ ஸீதாலக்ஷ்மண ஹநுமத் ஸமேத ஸ்ரீராமச்சந்திர மூர்த்திக்கு அபிஷேக ஆராதனை, பிரசாத விநியோகம், பஜனை.
(தேவஸ்தான கட்டளை)

பக்ஷ உத்ஸவம்

ஏகாதசி உத்ஸவம் :

பிரதி ஏகாதசியன்றும், ஸ்ரீராமபிரானுக்கு அபிஷேக ஆராதனை.

உபயதாரர்கள்:—
ஸ்ரீ ப. சு. ராமலிங்க செட்டியார் ஸன்
,, முனிவெங்கட்ராம செட்டியார் } சேலம்

மாச உத்ஸவம்

1. மாசப்பிரவேச உத்ஸவம் :

ஒவ்வொரு தமிழ்மாதப் பிறப்பன்றும் எல்லா மூர்த்திகளுக்கும் அபிஷேக ஆராதனை.
